# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 28/2018**

பெயர் : **சகுந்தலா** நாள் : 22.02.2023

வா.சா.2 – 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

வா.சா.2 – சகுந்தலா - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11.48</u>

நான் கோனேரிப்பட்டி அக்ரஹார கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். எனது கணவருக்கு கண் பார்வை இல்லை, வீட்டில்தான் இருந்து வருகிறார். நானும் எந்த வேலைக்கும் சென்று வருவதில்லை. நான் சாட்சியம் சொல்ல இந்த நீதிமன்றத்தில் இருந்து எதுவும் எனக்கு வரவில்லை. இந்த வழக்கின் வாதி எனது பக்கத்து காட்டுக்காரர் ஆவார், அவர் எனக்கு உறவினர்தான். வாதி தனக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க கேட்டுக்கொண்டதின் பேரில்தான் நான் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கின் பிரதிவாதிகளிடம் நாங்கள் பேசமாட்டோம். வழக்கு சொத்து குறித்த விபரம் மற்றும் அது எந்த கிராமத்தில் உள்ள என்ற விபரங்கள் எனக்கு தெரியாது. இந்த வழக்கின் 5ம் பிரதிவாதி யார் என்று எனக்கு தெரியாது. கோனேரிப்பட்டி அக்ரஹார கிராமத்தில் எங்களுக்கு விவசாயம் நிலம் உள்ளது. எங்களுக்குள் விவசாய நிலத்தின் பட்டா எண் மற்றும் சர்வே எண் என்னவென்று எனக்கு தெரியாது. எங்களுக்கு கோனேரிப்பட்டி அக்ரஹாரம் கிராமத்தில் எந்த நிலமும் இல்லையென்று சொன்னாலும், இந்த வழக்கிற்காக பொய்யாக நிலம் உள்ளதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. உண்மையில் கோனேரிப்பட்டி அக்ரஹாரம் கிராமத்தில் விவசாயம் நிலம் இருந்ததிருந்தால், அதனைப்பற்றி விபரத்தை முதல் விசாரணையில் கூறியிருப்பேன் என்றால், சரியல்ல.

2) கோனேரிப்பட்டி அக்ரஹாரம் கிராமத்தில் எந்த விவசாய நிலமும் இல்லையென்றாலும், அதனால் வழக்கு சொத்தினை எனது முன்னோர்களும், நாங்களும் அனுபவித்து வருவதாக முதன்மை சாட்சியத்தில் பொய்யாக கூறியுள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. வாதிக்கு கோனேரிப்பட்டி அக்ரஹாரம்

கிராமத்தில் உள்ள நிலத்தின் பட்டா எண் மற்றும் சர்வே எண் ஆகியவைகளின் விபரங்கள் எனக்கு தெரியாது. அதேபோல் பிரதிவாதிகளுக்கு கோனேரிப்பட்டி அக்ஹாரம் கிராமத்தில் உள்ள விவசாய நிலங்களின் விபரங்கள் எனக்கு தெரியாது. வாதி அசல் வழக்கை தடம் உரிமை கேட்டு தாக்கல் செய்துள்ளார். தடம் உள்ளது என்பதற்கான எந்த ஆவணத்தையும் இந்த நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். வழக்கு சொத்திற்கு அருகில்தான் எனது வீடு உள்ளது. பிரதிவாதிகள் விவசாய குடும்பத்தை சார்ந்தவர்கள் என்றால், சரிதான்.

3) 1 முதல் 4 பிரதிவாதிகள் பிரச்சனை செய்த விபரம் எனக்கு நேரடியாக தெரியும். பிரதிவாதிகள் என்னிடமும் வந்து பிரச்சனை செய்தார்கள். அதுசம்பந்தமாக புகார் எதுவும் நான் கொடுக்கவில்லை. நான் கூறுவதுபோல் பிரதிவாதிகள் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றாலும், பிரதிவாதிகள் பிரச்சனை செய்திருந்தால், புகார் அளித்திருப்பேன் என்றாலும், சரியல்ல. வழக்கு வாய்க்கால் வழியாக தண்ணீர் கொண்டு செல்லும் உரிமையையோ அல்லது நடந்து செல்லும் உரிமையையோ தடுக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல. வாதி உறவுக்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 12.01</u>

ஒப்பம் /சகுந்தலா

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.